[2nd March 1965

எக்கர் அனிமல் ஹஸ்பெண்ட்ரிக்காகவும், மீதியுள்ள 4,500 ஏக்கர் மண்ணைத் திருத்துவதற்கும், ரோடுகள் போடுவதற்கும், பில்டிங்ஸ் கட்டுவதற்குமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது, மத்தியிலே சிறு பகுதிகள், குறைந்த நிலங்கள் இருந்தாலுங்கூட அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டியதுதான் என்று சொன்னார்கள். அப்படியானால், ஒரு விதைப் பண்ணைக்குச் சொந்தமான நிலத்திற்குப் பக்கத்திலே உள்ள நிலத்தை பணத்திற்குப் பதிலாக நிலத்தையே கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசாங்கப் பண்ணையைப்பற்றியே பெரும்பாலும் விதைப் பண்ணையைப்பற்றியே இதுவரை விவாதித்து இருக்கிறோம். அது போகட்டும். விவசாயத் துறைக்குப் பொறுப்பு ஏற்று இருக்கக்கூடிய அமைச்சர் சூரத்கார் பண்ணையைப் போய் பார்த்திருக்கிறார்களா? நம்முடைய ராஜ்யத்திற்கு ஏற்ற மாதிரி 5,000 ஏக்கர் சேர்ந்தாற்போல் உள்ள தென் ஆற்காடு ஜில்லா, சேலம் ஜில்லா இருக்கிறது. அரசாங்கம் அப்படிப்பட்ட நிலங்களை எடுத்து பண்ணை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ரஷியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் உதவி கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். நான் விசாரித்துப் பார்த்து புள்ளிவிவரங்களையெல்லாம் பெற்றேன். சேலம் ஜில்லா ஆத்தூர் தாலுகா, மற்ற இடங்களிலும் 5,000 ஏக்கர் இருந்தால்கூட தண்ணீர் வசதிகள் இல்லை. நாங்குனேரித் தாலுகா பற்றியும் விசாரித்துப் பார்த்தேன். தண்ணீர் வசதியுள்ள நிலங்கள் எங்கேயும் புலப்படவில்லை.

திரு. பி. முருகையன் : வாளவச்சனூர் அருகில் 400 ஏக்கர் நிலம் இருக்கிறது. சாத்தனூர் திட்டத் தண்ணீர் போகிறது. அந்த இடத்தையாவது பயன்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: அந்த இடத்தைப்பற்றி எனக்குத் தெரியாது. வட ஆற்காடு ஜில்லாவில் 500 ஏக்கர் நிலம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அது எந்த இடம் என்று தெரியாது.

Recovery of value of chemical fertilizers

* 128 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any scheme is under the examination of the Government for collecting in kind the value of the chemical fertilizers supplied to agriculturists on loan basis; and

(*b*) if so, the details thereof?

2nd March 1965]

கனம் திரு. பூ. கக்கன்: (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: பரிசீலனை செய்தார்களா? அதனுடைய அவசியம் ஏற்பட்டதா?

கனம் திரு. பூ. கக்கன்: பரிசீலனை செய்ய வேண்டியதில்லை. அது நடைமுறையில் நடக்காது.

திரு. எம். தண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, அரசாங்க உரத்தின் விலை அதிகமாக இருக்கிற காரணத்தால் உரம் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. விலையைச் சற்றுக் குறைத்துக் கொள்ளும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: அரசாங்கம் பரிசீலனை செய்து பின்னால் ஒரு முடிவுக்கு வரும்.

திரு. கே. ஏ. மதியழகன்: விதைக்காக தானியத்தைப் பெற்றுக் கொள்வது என்ற திட்டம் என்ன காரணங்களால் ஏன் மேற்கொள்ளப்படவில்லை? காரணங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: என்ன காரணம் என்பதில்லை. பணம் அதிகமாகச் செலவாகும். அது நடைமுறையில் நடவாது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டைத்தைப் பொறுத்தவரையில் கடன்கள் கொடுக்கிறபோது 30 சதவிதம் ரசாயன உரங்களுக்காகவே கொடுக்கப்பட்டு வருவதைப் போன்று மற்ற மாவட்டங்களிலும் அதை விஸ்தரிக்கத் திட்டம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: இதுவரை உரம் எங்கெல்லாம் கொடுக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதோ அங்கெல்லாம் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யும்.

திரு. அ. ராகவ ரெட்டி: இரசாயன உரப் பங்கீடு எந்தெந்த நேரத்திலே எந்தெந்தப் பகுதிக்கு எவ்வளவு தேவை என்பது சரியாகத் தெரியாமலே பங்கீடு நடக்கிறது. அதை ஒழுங்காக காலாகாலத்தில் பங்கீடு செய்வதற்கு அரசாங்கம் தகுதியான ஏற்பாட்டை இந்த வருஷத்திலாவது செய்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: காலாகாலத்தில் கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய கட்டளை. ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பார்த்து உடனடியாக தாசில்தாருக்கு அனுப்புவார்கள். ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடமிருந்து வந்து ஒரு வாரத்திற்குள் தாசில்தார் அனுப்ப வேண்டுமென்ற கட்டளை இருக்கிறது.

திரு. அ. ராகவ ரெட்டி: எந்த அடிப்படையிலே அந்த உரங்களை கொடுக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

[2nd March 1965

கனம் திரு. பூ. கக்கன்: எந்தெந்த அடிப்படை என்று சொன்னால் யார் யார் அப்ளை பண்ணுகிறார்களோ (கனம் சபாநாயகர்: டிமாண்டுக்குத் தகுந்தபடி) அதைப் பார்த்துக் கொடுக்கிறார்கள். ஒரு பகுதியில் ரிஜிஸ்டர்டு ஹோல்டர்ஸ் இருந்தால் வேறு யாருக்கும் கொடுக்க மாட்டார்கள். அவ்வாறு இல்லாத இடங்களில் மற்றவர்களுக்குப் பார்த்துக் கொடுக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: சர்க்கார் நெல் கொள்முதல் திட்டத்தை வைத்திருக்கிறது. நல்ல நெல் கிடைக்குமென்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, பண்டமாற்று முறையில் கெமிகல் பர்டிலைசரைக் கொடுத்து அதற்குப் பதிலாக நெல்லை வாங்கிக் கொள்வதை பற்றிப் பரிசீலிக்கப்பட்டதா?

கனம் திரு. பூ. கக்கன்: அதிலே அரசாங்கத்தின் பரிசீலனைக்கு இடம் இல்லை.

கால்வாய்கள் புனரமைப்பு

*129 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாமிரபரணி தீரத்தின் கால்வாய் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா? எப்பொழுது பூர்த்தியடையும்?

(இ) மணிமுத்தாறு திட்டத்தின்கீழ் உள்ள Reserve tank கள் மொத்தம் எத்தனை?

(உ) அவைகளை பூரணமாக திட்டத்தில் சேர்ந்த குளங்களாக ஆக்குவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

THE HON. SRI V. RAMAIAH: (a) It has been proposed to take up nine channels for remodelling under the Tambaraparani System. Out of these, estimates for the remodelling of three channels, viz., the North Kodamelalagian channel, South Kodameralagian channel and Kodayar channel have been sanctioned by the Government and a portion of the works has been carried out during the last closure period. Further work will be done during the next closure period.

The proposals of the Chief Engineer (Irrigation) for the remodelling of three more channels, viz., Palayam channel, Marudur Keelakal channel and Marudur Melakal channel are under the consideration of the Government.

Proposals for the remodelling of the remaining three channels, viz., Kannadian channel, Tirunelveli channel and Nadhiyurni channel are under various stages of investigation.

(b) There are 39 tanks in the reserve list of Manimuthar Reservoir Project.

(c) The proposals for inclusion of the above 39 tanks under the Manimuthar system are under the consideration of the Government.